# பாடசாலையுடன் மேலதிகமாக பிள்ளைகளுக்கான பராமரிப்பு முறை

# சாத்தியமான சலுகைகளைப் பற்றி பெற்றோர்களுக்கு சுருக்கமான தகவல்

## பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும் (பராமரிக்கும்) குடும்பம் (டாகஸ்பமிலி)

பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளும் குடும்பத்தில் உங்களுடைய பிள்ளை வீட்டில் இருப்பதைப் போல் பராமரிக்கப்படுவதோடு அடிக்கடி அவர்களினுடைய பிள்ளைகளுடன் விளையாடவும் மேலும் குதிக்கவும் முடியும். நீங்கள் பிள்ளைகளைப் பராமரிக்கும் குடும்பத்துடன் சேர்ந்து உங்களுடைய பிள்ளையை பராமரிக்கும் நேரத்தை உங்களுடைய சொந்த விருப்பத்திற்கும், தேவைகளுக்கும் ஏற்ப ஏற்பாடு செய்யலாம்.

## மதிய போசனத்தை உண்ணும் இடம் (மிற்றாக்ரிஷ்)

இந்தப் பராமரிப்பிற்கான சலுகை உங்களுடைய பிள்ளைக்கு, மதிய போசனத்தை மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து உண்பதற்கும் அதோடு மத்தியானத்திலுள்ள மிகுதி ஓய்வு நேரத்தை மற்றவர்களுடன் சேர்ந்து கழிப்பதற்குமான வாய்ப்பை அளிக்கும். இந்த மதிய போசனத்தை உண்ணும் இடத்திற்கு திங்கள் தொடக்கம் வெள்ளி வரை, ஒவ்வொரு நாளும், அல்லது சில நாட்களுக்கு போகலாம்.

## மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பிரத்தியேக இடம் (கோர்ட்) / மாணவர்களுக்கான சங்கம் (கிளப்)

மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பிரத்தியேக இடங்களில், கின்டர் காடனுக்கும் அதோடு பாடசாலைக்கும் போகும் பிள்ளைகளுக்கு தனிப்பட்ட முறையிலும், விஷேஷ பராமரிப்பும் அளிக்கப்படுகின்றது. பிள்ளைகளும்

Volksschulamt
Projekt Umsetzung Volksschulgesetz

Walchestrasse 21, Postfach
8090 Zürich

umsetzungvsg@vsa.zh.ch

அதோடு பராமரிப்பவர்களும் சேர்ந்து பாடசாலை இல்லாத நேரத்தை அதிகமாக வித்தியாசமான வயதுடைய கிட்டதத்தட்ட இருபது பிள்ளைகளைக் கொண்ட குழுக்களாக ஒழுங்கு செய்வார்கள். இந்த பராமரிப்பிற்கு திங்கள் தொடக்கம் வெள்ளி வரை, நாள் முழுவதும், அல்லது சில நாட்களுக்கு அதோடு தெரிவுசெய்து காலை, மத்தியானம் அல்லது பின்னேங்களில் போகலாம்.

## முழுநாள் பாடசாலை / முழுநாள் கின்டர் காடன்

எல்லாப் பிள்ளைகளும் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை வகுப்பு தொடங்கியது முதல் வகுப்பு முடியும் வரை (மத்தியானச் சாப்பாட்டையும் சேர்த்து) இந்த முழுநாள் பாடசாலை அல்லது முழுநாள் கின்டர் காடனில் இருப்பார்கள். பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்பும் மேலும் பாடசாலை முடிந்த பின்பும் தன்னிச்சையாக செயல்ப்படலாம்.